# தமிழ் நாடு சட்டப் பேரவை

**செவ்வாய்க்கிழமை, 1974 ஏப்ரல் 2.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Stipends for Teacher Trainees*

* 704 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to discontinue the payment of stipends to the Secondary Grade Teacher Trainees in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) இடைநிலை ஆசிரியப் பயிற்சி மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த உதவித் தொகையை நிறுத்திவிடலாம் என்ற கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, உதவித்தொகை அளிப்பது 1973-74 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்படும் என்பதற்கான அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. தேவைக்கு வேண்டிய அளவு ஆசிரியர்கள் பயிற்சிக்கு வராத கட்டத்தில் இச் சலுகை அளிக்கப் பட்டது. தற்போதைய சூழ்நிலையில் இச்சலுகையை நீடிப்பது அவசியமில்லை.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கின்றவர்களுக்கு—நல்ல திறமை படைத்தவர்களுக்கு—இந்த உதவித் தொகையை அளிப்பது

இப்பயிற்சியை அவர்கள் பெறத் தூண்டுதலாக இருக்குமாதலால், இந்த உதவித் தொகையை அவர்களுக்குத் தொடர்ந்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் மாணவர்களை ஈர்ப்பதற்கு இந்த உதவித் தொகை அளிக்கப்பட்டது. இப்பொழுது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கில் இருக்கிறார்கள். சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு சேர்ப்பது நிறுத்தப்பட்டது. வகுப்புக்கு 40 மாணவர்கள் என்று இருந்தனர். சென்ற ஆண்டு 30 மாணவர்கள்தான் சேர்க்கவேண்டும் என்று குறைத்தோம். வருகிற ஆண்டில் கூட அதைப்பற்றி நாம் முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பயிற்சி இரண்டாண்டுக் காலம் முழு இலவசமாகத்தான் அளிக்கப்படுகிறது. ஆகவே, உதவித் தொகை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று எடுத்த முடிவை மாற்றுவதற்கில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை நிறுத்தியது போல, வேறு எந்தப் பயிற்சி பெறும் மாணவர்களுக்காவது உதவித் தொகையை நிறுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, if stipends are not paid to the trainees, efficient and interested candidates will not come forward for training. The Government have been giving so many facilities for other sections of the people. So, may I know why only these unfortunate people should be treated like this and whether the Hon. Minister will consider their case also?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 18 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுதே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 17,000, 18,000க்குமேல் இருக்கிறார்கள். படிப்பு இலவசமாகத்தான் தரப்படுகிறது. அதற்காகக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. உதவித் தொகை ஒரு காலத்தில் தரப்பட்டது. அது இப்பொழுது தேவை இல்லை என்ற முடிவு

*1974 ஏப்ரல் 2]*

எடுக்கப்பட்டது. இதுகுறித்து திட்டக் குழு கூட பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் சென்ற ஆண்டில் நிறுத்தப் பட்டது. மீண்டும் இதைப் புதுப்பிப்பதாக இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, உதவித் தொகையை நிறுத்தியதுபோல், உபகாரச் சம்பளத்தை நிறுத்து வதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உபகாரச் சம்பளத்தை நிறுத்துவதற்கு ஒன்றும் வழி இல்லை. 'ஸ்டைபெண்டு' என்ற உதவித்தொகை மட்டும்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** இந்த உதவித் தொகையை அரிசன மாணவர்களுக்கு மட்டுமாவது கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்புகள் இல்லை.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, 17,000 ஆசிரியர்களுக்குமேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். வேலை யில்லாமலிருக்கும் பயிற்சிபெற்ற இந்த ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கும்போது ஸீனியாரிடிபடி வேலை கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஸீனியாரிடி முறை கடைப்பிடிக்க வேண்டும் என்று தான் நாம் எடுத்துச்சொல்லி வந்தோம். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பொறுத்தும், அரசுப்பள்ளிகளைப் பொறுத்தும் அதைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று மாவட்டக் கல்வி அதிகாரிகள் மூலம் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அந்த முறையைக் கடைப் பிடிக்குமாறு தனியார்ப் பள்ளிகளுக்கும் உத்தரவிட்டோம். ஆனால், அவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள். அதற்குப்பிறகு அந்த விதியைத் தளர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கூடுமானவரை ஸீனியாரிடிப்படிதான் கொடுக்கவேண்டும். 1969-1970-1971-ம் ஆண்டுகளில் தேறியவர்களுக்கு முதலிடம் தந்து

விட்டு, அதற்குப்பிறகு தேறியவர்களுக்கு அதையடுத்துத் தரவேண்டுமென்ற கொள்கையைத்தான் அரசு ஆதரித்து வருகிறது.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஆசிரியர் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு உதவித் தொகையை நிறுத்திவிட்டதனால் பலரும் அதனால் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். லோன் வழங்கக் கோரி தேவைப்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்தால், அவர்களுக்கு லோன் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கடன் தருவதற்கு இப்போதே சிலபல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென்று தனியாக ஏற்பாடு செய்வதற்கில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை கொடுப்பதன்மூலம் ஆண்டொன்றுக்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவாயிற்று என்று அறியலாமா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த உதவித் தொகை கொடுக்கும் குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இந்த உதவி தொகை கொடுக்காவிட்டால் பல மாணவர்கள் சேர்ந்து பயிலுவதற்கு வாய்ப்பிருக்காது. எனவே, இதை மனத்தில் வைத்துக் கொண்டு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமாவது இந்த உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற முடிவை அரசாங்கம் எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்குரிய ஹாஸ்டல்கள் தனியாக இருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் வராது. பயிற்சிப் பள்ளிகளோடு இணைந்த விடுதிகளில் இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. எங்கு வேண்டுமானாலும் இப்பொழுது இருக்கலாம் என்று விதி தளர்த்தப்பட்டிருக்கிறது. மாணவர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் வந்து படித்துக்கொள்ளக்கூடிய நிலை இருப்பதால், தனிச் சலுகை அளிக்கப்படுவதன் காரணமாக. இந்த உதவித் தொகை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.